முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

O.S. No.56/2024

2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் நாள் திங்கள்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ் | ஜாதி | |
| தந்தையார் பெயர் | சண்முகம் | மதம் | |
| கிராமம் | திருச்சி | தொழில் | |
| வட்டம் | திருச்சி | வயது | 58 |

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த சாட்சிய நிரூபண வாக்குமூலத்தை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்குமாறு வேண்டுகிறேன். பிரமாண வாக்குமுலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணப் பட்டியல்படி **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

மன்னார்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 576/1976 த்தை தமிழரசன் என்பவர் உற்பத்தி செய்த ஆவணத்தை பொறுத்து நான் நிரந்தர உறுத்துக் கட்டளை கோருகிறேன். மன்னார்குடி சார் பதிவாளர் மற்றும் மாவட்ட பதிவாளரை பொறுத்து நான் எந்தவித உறுத்துக் கட்டளையும் கோரவில்லை என்றால் சரி. 2-ம் பிரதிவாதியின் அலுவலகம் உரிய சட்ட விதிகளுக்க உட்பட்டு பதிவு சட்டப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. தாவா சொத்தை பொறுத்து சமூகம் நீதிமன்றம் இறுதியாக பிறப்பிக்கும் தீர்ப்பிற்கு ஏற்பவும் நடக்கவும் 2, 3 பிரதிவாதிகள் நடக்க தயாராக உள்ளார்கள் என்றால் சரி. பத்திரத்தை ரத்து செய்ய வேண்டுமென்றால் வருவாய் கோட்டாட்சியரிடம் கோர வேண்டும் எனவும் நீதிமன்றத்தில் பரிகாரம் கோரக் கூடாது எனவும் சொன்னால் தவறு. பரிகாரங்களை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.02.10 14:41:33 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.